உ

கரந்தைத்தமிழ்ச்சங்கம்.

(பதிவு செய்யப்பெற்றது.)

தஞ்சை.

விரோதிகிருது௵ வைகாசி மீ ௧௨

தாபிக்கப்பெற்றது.

மூன்றாவது ஆண்டு நிறைவு

அறிக்கைப்பத்திரம்.

பிரமாதீச—ஆனந்த௵

TRICHINOPOLY:
THE WEDNESDAY REVIEW PRESS TRICHINOPOLY LTD.
1914

The Karanthai Tamil Sangam,

TANJORE.

Registered under Act XXI of 1860 of the Governor-General of India in Council.

Founded on the 14th May, 1911.

OBJECTS.

1. To advance and improve the cause and condition of Tamil and Tamilians.

2. To promote friendly and social intercourse among the members.

3. To maintain the Charitable Institutions of the Tamilians.

4. To afford, as far as practicable, facilities for the physical, moral, social and mental improvement of its members.

5. To help the industrial and economic advancement of the Tamilians.

These objects are to be attained by organising lectures and debates, maintaining reading rooms and libraries, holding tuition classes, publishing books, magazines and tracts, carrying on original researches,

உ

கரந்தைத்தமிழ்ச்சங்கம்.

(பதிவு செய்யப் பெற்றது.)

தஞ்சை.

மூன்றாவது ஆண்டு நிறைவு அறிக்கைப் பத்திரம்.

பிரமாதீச—ஆனந்த ௵.

பூவினிற் சிறக்குமிப் புண்ணியத் தமிழ்நாட்டில் தமிழ்ப்பயிர் விளைப்பான் முயன்றுவரும் நம் சங்கம் தொடங்கி மூவாண்டு முற்றியதாக, அருந்தமிழ் மக்கள் குழீஇய இப்பேரவைக்கண் எமது அறிக்கையினைச் சமர்ப்பிக்கின்றோம். இவ்வாண்டில் எமது முயற்சி நலங் காண்பார்க்கு இவ்வறிக்கை எங்களைப் போலவே கழிபேருவகையுறச் செய்யுமென எண்ணுகின்றோம்.

இரண்டாவது ஆண்டுநிறைவு விழா

சென்ற பிரமாதீச ௵ ஆனி௴ அ, கூ தேதிகளில் இவ்விழா, கோயம்புத்தூர் ஐக்கோர்ட்டு வக்கீல்

கனம் T. A. இராமலிங்கம் செட்டியார் அவர்கள் B. A., B. L. திப்பிய அக்கிராசனத்தின் கீழ், மிகவிமரிசையாக நடந்தேறியது.

வழக்கம் போலவே பற்பல ஊர்களினின்றும் வித்துவான்களும், கனவான்களும் பலப்பலர் விசயஞ் செய்து சங்கத்தைக் கௌரவித்தனர். அக்கிராசனுதிபதியவர்கள் பண்டைத் தமிழும் தமிழரும் மஹோன்னத நிலையில் நின்று நிலவி, அநாகரிக அந்தகார இருட்பிழம்பகத்தே தடுமாறிய மற்றை உலகினர்க்கு நாகரிகச்சுடர் காட்டி விளக்கிய அரும்பெருஞ்சரித உண்மையினை எடுத்தோதி அவர்வழி வந்தோமாகிய தமிழர் பலரும் அன்னார் அடிச்சுவடு பற்றியொழுகி அவர் வழித்தோன்றல்களுக்கேற்ற பெருமையினை எய்தும் வண்ணம் அறிவுறுத்திய அருந்தமிழ் வள்ளன்மை மறக்கற்பாற்றே! இன்னும் அன்று குழீஇய பேரவையின்கட்போந்து, தேனே, பாலோவெனச் சுவைமல்கும் பரிவுரை தெளித்து எம்மைக் கடைத்தேற்றிய அறிவின் மிக்கார் கருணைப் பெருக்கத்தையும் தமிழுலகு யாண்டும் போற்றி ஏத்தும் கடமைவாய்ந்ததாம்.

அங்கத்தினர்.

நம் சங்கம் மேற்கொண்ட அரும்பணியின் நலத்தைக்கண்டு தமிழுலகு பெரிதும் பாராட்டி வரு

வதற்கிலக்காக நமதங்கத்தினரின் தொகை சென்ற வருடத்தை நோக்க மிகவும் மல்கியது. இரண்டாவது ஆண்டினிறுதியில் அங்கம் அமர்ந்திருந்தார் முப்பதின்மரானார். நிகழும் ஆண்டில் எம்மொடு பொருந்தியுழைக்க விழைந்து கூடினார் முப்பத்தொன்பதின்மராவர். இவருள், காலகதியால் இறைவன் திருவடி நீழல் எய்தினார் இருவரும், பிறகாரணங்களால் நீங்கினார் அறுவரும் போக, அன்னை கடனாற்ற எம்மொடு பொருந்தியுள்ளார் அறுபத்தொருவராவர். (அநுபந்தம் க.) யாம்கொண்ட கருமத்தின் எல்லையினை நோக்க இவ்வெண்ணினரும் மிகச் சாலாதாராகையான் நம் தமிழ்ச்சகோதரர் பலர் முன்வந்து எமக்குக் கைகொடுத்துதவுவாரெனப் பெரிது வேண்டுகின்றோம்.

கூட்டங்கள்.

சென்ற வாண்டிற் போலவே நம் சங்கத்தில் இவ்வாண்டும் பெரியபுராண ஆராய்ச்சி சற்றும் தளராவூக்கத்தொடு நடைபெற்று வந்தது. இவ்வரும் பெருங் கைங்கரியத்தை முட்டின்றி அன்பின் நடைபெறுத்திவரும் புராணப் பிரசங்க சபைத் தலைவர் வித்துவான் கனம் சிவ சோலைமுத்துப்பிள்ளையவர்களுக்கும், வித்துவான் கனம் இராமசாமி வன்னியரவர்களுக்கும், வித்துவான் கனம் சொக்கலிங்கம்பிள்ளையவர்களாதியோர்க்கும் கருணையங் கடவுள் திருவருள்

மல்குகவென வேண்டித்துதிக்கின்றோம். இவ்வாறு நடந்த பிரசங்கங்களின் தொகை 41 இவைகளில் நடந்தேறிய திருவிருத்தப் 1244. ஆகவே கூட்ட மொன்றிற்கு ஏறக்குறைய 30 செய்யுட்கள் நடை பெற்றிருக்கின்றன. இத்தொகையினைச் சென்ற வருடத்ததாகிய 20 பாக்களோடு ஒப்புநோக்கி இவ் வாண்டில் எம் உழைப்பு நலங்கண்டு தமிழுலகு களிப் பெய்துமென்று நம்புகின்றோம்.

இவைகளையன்றியும், இரண்டு பிரபல பொது சனக் கூட்டங்களும், பதினொரு காரியநிருவாக சபைக்கூட்டங்களும், சர்வ அங்கத்தினர் கூட்ட மொன்றுமாக இவ்வாண்டில் நிகழ்ந்தன 55 கூட்டங் களாகும். எனவே நம் சங்கம் சராசரி வாரமொரு முறை தவறாது நம்மருந்தமிழ்ச்சகோதரர்களை ஒருங்கு கூட்டி அவருள் ஒற்றுமையுண்டாக்கிய தனறி அவர்களுக்குச் "செல்வததுட் செல்வமென"ப் பெரியாரால் பாராட்டப் பட்ட செவிச்செல்வத்தினை யும் உதவி அவர்களை மேம்படுத்தியதும் புலனும். பிரபல பொதுசனக்கூட்டங்களின் விவரம் வருமாறு:—

I. பிரமாதீசஹு மார்கழிமீ 12உ (26-12-13) யன்று வக்கீல் கனம் இராமசேஷையரவர்கள் B. A., B. L. அக்கிராசனத்தின் கீழ் ஒரு பெருங் கூட்டம் கூடியது. அன்று நமது காருண்ணிய அரசாங்கத்

தார் உதவியால் தயாரித்துவரும் தமிழ் அகராதி சம்பந்தமாக வெளிவந்த மாதிரிப் பக்கங்கள் பரிசோதிக்கப்பெற்று அதில் மலிந்துகிடந்த குற்றங்களைக் குறித்துச் சில தீர்மானங்கள் அனுப்பப்பட்டதுடன், நம் தாய் மொழிக்குத் தாயகமாய்த்திகழும் சேது நாட்டரசவள்ளல் மாட்சிமிக்க சேதுபதியவர்கள் ஸ்ரீ மதுரைத் தமிழ்ச்சங்கத்தக்கிராசனம் வகித்தது குறித்தும், நம்சங்கத்தங்கத்தினர் கனம் ஐ. குமாரசுவாமி பிள்ளை யவர்கள் B. A. இந்நகர்க்கு உபநகர பரிபாலனம் வகித்தமை குறித்தும் கொண்டாடிய வாழ்த்துப் பத்திரங்கள் அவரவர்களுக்கு அளிக்கப் பெற்றன. அவற்றோடு இளங்காட்டு வித்துவான் கனம் முத்து வீரைய உபாத்தியாயரவர்களால் கம்பராமாயணப் பிரசங்கம் ஒன்றும நடைபெற்றது.

II. பிரமாதீசஹு மாசிமீ ௰௧௨ (22-2-14) யன்று நம் சங்கத்து ஆதரிப்பாளர் கனம் சா. ரும. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்கள் M. R. A. S. அக்கிராசனத்தின் கீழ் ஓர் பெருங்கூட்டங் கூடி கீழ்க்குறித்த பிரசங்கங்கள் நிகழ்ந்தன.

1. "தமிழ்மொழியும் வளர்நெறியும்"— பண்டிதர் கனம் வையை R. சுப்பிரமணியையரவர்கள்.

2. "வருணாசிரம தருமம்"—கனம் N. K. இராமசுவாமி ஐயரவர்கள் B. A., B. L.

இப்பிரசங்கங்களை யன்றி கல்யாண சுந்தரம் உயர்தரப்பாடசாலை உபாத்தியாயர் கனம் நடேசை யரவர்கள் இயற்றிய "கணக்குப் பதிவு நூல்" என்னும் ஒரு அரிய பெரிய நூல் அரங்கேற்றப்பட்டது.

புத்தகசாலை— கரந்தைத்தமிழ்ச்சங்கக்கலாநிலையம்.

நம் புத்தகசாலை வழக்கம் போலவே நமது அங்கத்தினர்களுக்கும் இன்னும் பலவித்துவான்களுக்கும் மிகவும் உபயோகமாக இருந்துவருகிறது. இவ்வாண்டில் நம் புத்தகசாலை மிகவும் வளர்ந்து பெருகியது. இதற்குப் பெரிதும் காரணமாயினர் நம் சங்கத் தலைவரேயாவர். இஃதன்றி நமது ஆதரிப்பாளர் கனம் பெத்தாச்சிசெட்டியாரவர்களின் முயற்சி நலத்தால் ஸ்ரீ மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரவர்கள் தாம் பிரசுரித்தவற்றுள் தற்போது கிடைப்பனவாய 38 சிறந்த நூல்களையும் 'செந்தமிழில்' முதல் பதினொரு தொகுதிகளையும் அனுப்பியுதவியதன்றி 'செந்தமிழை'யும் மற்றைநூல்களையும் அவ்வப்போது இனமாக எங்களுக்கு அனுப்பியருளவும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அச்சங்கத்தாருக்கு எங்கள் என்றும் மறவா நன்றியினைச் செலுத்துகின்றோம். சென்ற வாண்டின் இறுதியில் புத்தகசாலையில் இருந்த பிரதிகள் 112. இவ்வாண்டில் சேர்க்கப் பெற்ற 131 பிரதிகளுங்கூட இவ்வாண்டினிறுதியில் இருந்த பிரதிகள் 243. இவ்வருடத்தில் இரண்டாவது அநுபந்தத்திற் காட்டியபடி தமிழபிமானிகளால்

129 பிரதிகள் உதவப்பெற்றன. இவ்வன்பர்பால் யாம் என்றும் மறவாநன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

சங்கப்பிரசுரம்.

பழைய தமிழ் நூற்களைப் பரிசோதித்துப் பிரசுரித்து அவைகளை இறந்துபடாது காத்தலும், ஆங்கிலமாதிய பாஷைகளிலுள்ள பற்பல சாத்திர நூற்களைத் தமிழில் மொழிபெயர்த்தமைத்துக் கொள்ளலும், பின்னும் நம் தமிழ்ச் சகோதரர்களுக்கு ஏற்றன நாடி எழுதி வெளியிடுதலும் யாம் கொண்ட நோக்கங்களுள் மிகமுக்கியமானவாயினும் ஊதியக்குறைவால் இத்துணையும் யாம் இவ்வழியில் நெடிது சென்றிலம். எனினும் "தமிழவள் கமழ் மொழி" என்றோர் வரிசைப் பிரசுரம் தொடங்கி அவ்வரிசையில் முதன் முதலாக திருவனந்தபுரம் காலஞ்சென்ற கனம் சுந்தரம்பிள்ளையவர்கள் M. A. எழுதியுதவிய நூஉம், கல்லையும் உருக்கவல்லநூஉமாகிய அருமைத் தமிழ்த் தெய்வவணக்கத்தினை அச்சிட்டு வெளியிட்டோம். பின்னர் இரண்டாவதாக நம் சங்கத்து இரண்டாவது ஆண்டுநிறைவு விழாவில் நிகழ்ந்த பிரசங்கங்களை தக்க விற்பன்னர்களால் வரையப்பட்ட தமிழ்த் தெய்வவணக்கச் செய்யுட்களோடு சேர்த்துப் புத்தக ரூபமாக அச்சிட்டு வெளிப்படுத்தினோம்.

இன்னும் சில நூற்கள் பிரசுரிக்கவேண்டி சங்கத்தின் ஆராய்ச்சியிலிருந்துவருகின்றன. ஆங்கிலத்திலுள்ள "Men of Letters series" என்னும் புத்தகங்கட்கிணங்க நம் பண்டைப் புலவர் சரிதங்களை ஆய்ந்து அவைகளில் மலிந்துகிடக்கும் கட்டுரைகளையகற்றி, உண்மைச்சரித நெறிபிறழா வண்ணம் எழுதித் தக்க இலக்கணவிலக்கிய ஆராய்ச்சியுரைகளோடு வெளியிட எண்ணி இப்பொழுது சிவப்பிரகாசர், அதிவீரராமபாண்டியர், குமரகுருபரர், பிள்ளைப்பெருமாளையங்கார், ஆகிய நால்வர் சரிதங்களும் எமது ஆராய்ச்சியிலிருந்துவருகின்றன. இனி அருந்தமிழபிமானச் சீரியர் உதவிகொண்டு இவ்வழியில் அதிகப் பிரயோசனம் காட்டலாமெனத் துணிகின்றோம்.

சபைப்பதிவு.

நம் சபை நாளும் வளர்ந்துவர அதன்பால் நமதருந்தமிழ் நேயர்களுக்குப் பூரணநம்பிக்கையும் கௌரவமும் பிறக்கவேண்டியும், நமது காருண்ணிய அரசாங்கத்தாரது இடைவிடா மேற்பார்வையும் அநுசரணையுங் கிட்டுமாறும், நம் சங்கத்தினை 1860ம் வருடத்திய 21வது சட்டப்படி ஆனந்தஹூ சித்திரைமீ ௰௬ (1-5-14) யன்று பதிவு செய்தோம். பதிவுப்பத்திரம் இத்துடன் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. (அநுபந்தம் ௩.)

கிளைச்சபை.

திரிசிரபுரத்தில் வதிந்துவரும் நமதங்கத்தினரின் வேண்டுகோட்கிணங்கி பிரமாதீச வரு கார்த்திகை மீ கவ (16—11—13) யன்று நம் சங்கத்தின் கிளைச்சபையொன்று தாபித்தோம். இச்சபை உழைப்பின் மாட்சி நலம் இத்துடன் சேர்த்திருக்கும் அநுபந்தத்தால் (அநுபந்தம் ௬.) தெற்றென விளங்கும். இன்னும் இன்னிய கிளைகள் யாண்டும் பரவித்தமிழன்னைக்கு நிழல்பாலிக்குமென நம்புகிறோம்.

தமிழகராதி.

நமது சங்கம் தாபகமானது முதல் தமிழின் அபிவிருத்தியை எங்களாலியன்றவரை கோரிவந்ததன்றி அரசாங்கத்தாரையும், சர்வகலாசங்கத்தாரையும் அவ்வப்போது நமது மொழியின் வளர்ச்சி குறித்துப் பலவாறு விண்ணப்பித்தும், அவர்கள் நடவடிக்கைகளிலும், சட்டங்களிலுமுள்ள குற்றங்குறைபாடுகளை நன்கு எடுத்து விளக்கி அவைகளைச் சீர்திருத்துவான் அவர்பாற் குறையிரந்தும் யாம் உழைத்து வந்தது தமிழுலகு அறிந்ததொன்றேயாகும்.

இவ்வழி இவ்வாண்டில் முக்கியமாய் அரசாங்கத்தார் உதவிய ஒரு லக்ஷ ரூபாயைக்கொண்டு தயாராகிவரும் தமிழகராதி யாவர்க்கும் பயன்படு

மாறு அதிற்கண்ட குற்றங் குறைபாடுகளை நிவர்த்தித் தலைப்பற்றி அகராதிச் சங்கத் தலைவருக்கு அவர்கள் வெளியிட்டிருந்த மாதிரிப் பக்கங்களைப்பற்றித் தகுந்த பண்டிதர்களைக்கொண்டு தயாரித்த ஓர் ஆராய்ச்சியுரையினை விடுத்தோம். தலைவரவர்கள் யாம் எடுத்துக்காட்டிய குறைபாடுகளை ஒப்புக்கொண்டனராயினும், ஒவ்வொருபதத்திற்கும் தமிழில் உரையெழுதுவது அநாவசியகம் என்று பிரதியுத்தரம் வரைந்து விடுத்தனர். அரசாங்கத்தார் கொடுத்த ஊதியம் சிறந்த தமிழகராதி பொன்று தயாரிப்பதற்கே உதவியதாயிருப்ப, அகராதிச்சபைத்தலைவர் தமது இந்தக்கோட்பாடு எட்டுணையும் நியாத்திற்குப் பொருந்தாததாகும். இது குறித்து அரசாங்கத்தினர்க்கும், சர்வகலா சங்கத்தினர்க்கும் நமது சங்கத்துத் தீர்மானங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அன்னோர் இதுபற்றி நன்கு விசாரித்துத் தாம் உதவிய ஊதியம் அவமாகாது பயன்பட ஏற்றன நாடுவாரென நம்புகின்றோம்.

வருவாய்.

இவ்வாண்டில் சங்கத்தின் வருவாய் விசேடமாய் அங்கத்தினரிடமிருந்து வந்ததாகும். வேறு அன்பர்களால் உதவப்பட்டது மிகச்சுருக்கமாம். சங்கத்தின் ஊக்கமும், வேலையும் தக்க வருவாயைப் பற்றிச் சிறந்து விளங்குவனவாகலானும் அருந்த

மிழ்ப்பணி மேற்கொண்ட நமது அங்கத்தினரே அப் பணிக்குவேண்டும் பொருள்முழுதும் ஏற்றுக்கோடல் கூடாமையானும் நமது தமிழன்பர்கள் பலரும் இவ்வழியில் தமது கடப்பாடோர்ந்து முன் வந்து நம் சங்கத்தை ஆதரிப்பார்களாக. இவ்வாண்டு சங்கத்தின் வருவாயினை விருத்தி செய்துகொள்ளுமாறு புதியதோர் கொள்கை வகுத்துக் கொண்டோம். நமதங்கத்தினர்களுக்கு மணவிழாவாகிய மங்கலச் சடங்குகள் நிகழுங்காலங்களில் அச்சுபதினத்திற்கோர் அறிகுறியாய் நம் சங்கத்திற்கு அவரவர் சக்திக்கேற்ற பொருளுதவி அன்னைகடனாற்றும் நியமத்தினை ஏற்றுக்கொண்டோம். இவ்வழியில் உதவியார் விவரம் வருமாறு:—

1. கனம் சிவகுருநாதபிள்ளையவர்கள்— ரூ 25 பொருமான புத்தகங்கள்.
2. கனம் பாலகிருஷ்ணபிள்ளையவர்கள் B. A — ரூ 25 பொருமான புத்தகங்கள்.
3. நீடாமங்கலம் கனம் பக்கிரிசாமிபிள்ளையவர்கள்— ரூ 10
4. கனம் சுவாமிநாதபிள்ளையவர்கள்— ரூ 2
5. கனம் வீ. சுப்பராயபிள்ளையவர்கள்— ரூ 7 பொருமான புத்தகங்கள்.

இக்கனவான்களுக்கு எப்பன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

நயதங்கத்தினரன்றி தமிழன்பர்களெல்லாருமே இக்கோட்பாட்டினை அநுசரித்தல் சாலப் பொருத்தமுடைத்தென்பது சொல்லவே விளங்குவதாம்.

இவ்வருட வரவு செலவு விவரங்களை அநுபந்தத்திற் கண்டுகொள்க. (அநுபந்தம் ரு.)

இடம்.

கட்டிட வசதியில்லாக் குறைவால் எமக்கு ஏற்படும் இடர்ப்பாடுகள் சென்றவாண்டு அறிக்கைப் பத்திரத்தில் தெரிவித்துக்கொண்ட அளவில் சற்றும் குறைபடவில்லை. புத்தகசாலையில் நமது அங்கத்தினரும், பிறவித்துவான்களும் சாவதானமாய்ச்சென்று படிப்பதற்கு ஏற்ற இடம் இன்னும் கிடைத்தபாடில்லை. இப்பெருங் குறையினை விலக்க முன்வந்து நம்தமிழன்னையாருக்கேற்றதோர் உறைவிடம் வகுப்பதற்குத் தக்க பொருளுதவி செய்வதாக வாக்களித்த மாருப் பெருங்கருணைவள்ளல் கனம் பெத்தாச்சி செட்டியாரவர்கள் பெருமை முற்றுங் கூறவல்லேமோ? இனி இறைவன திருவருளால் இப்பெருங்குறை விரைவில் அகலுமென நம்புகிறோம்.

எமது நேக்கம்,

நம் சங்கத்தின் நோக்கத்தினையெல்லாம் சென்றவாண்டு அறிக்கைப்பத்திரத்தில் நன்கு வெளியிட்டிருக்கிறோம். தமிழும் தமிழ்நன்மக்களும் தம்

பண்டைப் பெருமையுறச் செய்வது குறித்தே நம் சங்கம் உழைத்துவருவது யாரும் அறிந்ததே. இவ் வரும்பணி பூண்ட யாம், வித்துவான் காலஞ்சென்ற கனம் சுந்தரம்பிள்ளையவர்கள் வரைந்துதவிய அருமைத் தமிழ்த் தெய்வ வணக்கச் செய்யுளை எம் காரியங்களைத் தொடங்குமுன் ஓதுவதாகக் கொண்ட நியதி முற்றும் அமைவுடைத்தெனத் தெளியப்படும். ஆனால் அச்செய்யுளில் வரும்,

"மனங்கரைத்து மலங்கெடுக்கும வாசகத்தின் மாண்டோர்கள்,
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ."

என்னுந்தாழிசை வேதத்தை இழித்துரைத்ததாக ஒரு சிலர் கொண்டு எம்மையும் எம் கொள்கையினையும் கண்டிப்பான் புக்கனர். வேதத்தினையாவது, வேதோத்தமர்களையாவது பழித்தலும், இழித்தலும் எங்களுக்கு முற்றும் புறம்பாயதொருவழக்காம்.

"வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்பவிதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதையுலகில்மற்றையரிலரே."

என்று மனங் கனியவுரைத்த சுத்தசைவத் திருமேனிகளாகிய ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கைப் பற்றிய இத்தமிழ்த் தெய்வணக்கம் ஆரியம் அறியாச்சுத்தத் தமிழ் மக்கட்கே உரைத்ததாகையான், பொருள் தெரிந்துகொள்ள வியலாது போலி ஆசாரம் வகித்துக் கனஞ்சடையென்று கண்மூடி உருவேற்றி நிற்கும் ஒரு சில தமிழ் மக்களைக் கண்டித்ததல்லது பரதூஷணம் யாதும் இத்தாழிசையில் இல்லையென்பது தேற்றம்.

யாம் சென்றவாண்டு அறிக்கையில் தெரிவித்தபடி கைத்தொழிலோடு தமிழும் கற்பிக்கும் பாடசாலை இவ்வாண்டில் தாபிக்க வியலாதேமாயினும், கூடிய விரைவில் இக்குறையினை நீக்க முயன்று வருகிறோம்.

இரங்கல்.

இவ்வாண்டு, கேடில் பெருங்கூன்று, அந்தோ! எம்பால் கேடுபல சூழ்ந்தது. அருந்தமிழ்த்தொண்டு பூண்டு விளங்கினவரும், சென்ற ஆண்டுநிறைவு விழாவிற்கு வந்த விருந்தினரை உபசரிக்குங் கடமை வகித்து மெய்வருத்தம் பாராமை முதலிய வுடையராகி அக்காரியத்தில் பிறர் எவர்க்கும் சிறிதுங்கவலையின்றி நடத்தும் அரியகாரியத்தை மேற்கொண்டாருமாகிய கனம் மாதுசாமி வன்னியரவர்களும், பலவாறு எமக்குத் துணையாயிருந்து உழைத்த கனம்

ப. வேங்கடாசலம் பிள்ளையவர்களுமாகிய அங்கத்தினர்களும், அருந்தமிழபிமானம் மிக்கவராய், தமதரிய யுக்தி யோசனைகளால் சங்கத்தின் விருத்திகோரி யுழைத்து வந்த கனம் ஜி. டி. பிள்ளை, Bar-at-Law அவர்களும், நமது கூட்டங்கள் நடத்திவரத் தமது அழகிய இக்கட்டிடத்தை உதவிவந்தாருமாகிய கனம் அப்பாவுசெட்டியாரவர்களும் காலஞ்சென்றமை எமக்கு ஆராத்துயரை மிகவிளைவிக்கின்றது.

வாழ்த்து

சென்றவாண்டின் ஆண்டுநிறைவுவிழாச் செலவு குறித்து ஒரு நூறு ரூபாய் உபகரித்த அருட்கொண்டலும், தமிழ் நலங்கருதி எமக்குப் பல வாறு உதவி புரிந்துவரும் அருந்தமிழ் வள்ளலாரு மாகிய ஆண்டிப்பட்டி ஜமீன்தார் கனம் சா. ரும. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களும், தமிழன்பு மேலீட்டால் எம்பால் ஒழியா நண்பு பாராட்டிவரும் கனம் வா. கோபாலசாமி இரகுநாத இராஜாளியாரவர்களு மாய எமது அருமை ஆதரிப்பாளர்களுக்கு நாங்கள் எங்கள் என்றும் மறவா நன்றி யுரிமையினைச் செலுத்துகின்றேம். வழக்கம்போலவே இச்சங்கவேலையில் அளவிலா ஊக்கங்காட்டி இடைவிடாது அதன் நலங்கருதி உழைத்துவரும் எங்கள் சங்கத்தலைவர் கனம் த. வே. உமாமஹேஸ்வரம்பிள்ளை B.A.,B.L. அவர்களுக்கும் இன்னும் சங்க கைங்கரியத்தில் மிக ஆத

ரங்காட்டி யுழைத்துவரும் வக்கீல் கனம் ஐ. குமார சுவாமிபிள்ளை அவர்கள் B A., காசுக்கடை கனம் சோமனாதராவ் அவர்கள், கனம் குருமூர்த்தி பிள்ளை அவர்கள் முதலிய பலர்க்கும் தமிழுலகம் அன்புபாராட்டும் கடமை வாய்ந்ததாம். சென்றவாண்டில் மிகத்திறமையுடனும், ஊக்கத்துடனும் முறையே காரியதரிசி, பொருளாளர் வேலைகளை வகித்த அங்கத்தினர் கனம் கல்யாணசுந்தரம்பிள்ளை அவர்களுக்கும், கனம் தக்ஷிணாமூர்த்திபிள்ளை அவர்களுக்கும் எம் சங்கத்தின் பூரண வந்தனம் உரியதாகும். அன்றியும் எமக்கு வேண்டும் போதெல்லாம் தம உன்னத மாளிகையையும், வாகனாதிகளையும், எம்முபயோகத்திற்கென அன்புடன் உதவி, எம்மாட்டுப் பெரிதும் ஆதரங்காட்டி யொழுகும் அருந்தமிழபிமானப் பெருந்தகையாளர் ஸ்ரீமான் வீ. அப்பாசாமி வாண்டையாரவர்கள்பால எமக்குள்ள நன்றியின்றிறனை என்னென்றுரைப்பேம்? அவர்களுக்கும் எம மன்பார்ந்தவந்தனத்தை இப்போவை அறியச் செலுத்துகின்றோம். சுபம்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை. ஆனந்த ஹூ வைகாசி மீ	R. வேங்கடாசலம், காரியதரிசி.

அநுபந்தம் க.

கரந்தைத்தமிழ்ச்சங்கம்,
தஞ்சை.

ஆதரிப்பாளர்.

சீமான் வா. கோபாலசாமி இரகுநாத
இராசாளியார் அவர்கள், F. T. S., O. S. E.

சீமான் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் அவர்கள்,
M. R. A. S. ஆண்டிப்பட்டி ஜமீன்தார்.

சங்கத்தலைவர்.

சீமான் த. வே. உமாமகேஸ்வரம் பிள்ளை அவர்கள்,
B. A., B. L.

காரியதரிசி.

சீமான் R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்.

பொருளாளர்.

சீமான் ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்.

கணக்குப் பரிசோதகர்.

சீமான் பா. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்கள்.

நிர்வாகசபையார்.

க.	சீமான்	த. வே. உமாமஹேஸ்வரம் பிள்ளை அவர்கள், B. A., B. L.	
உ	,,	R. வேங்கடாசலம் பிள்ளை	அவர்கள்.
ங	,,	ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை	,,
ச	,,	ஐ. குமாரசாமி பிள்ளை	,, B. A.
ரு	,,	சி. தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை	,,
சா	,,	T. B. சோமநாதராவ்	,,
எ	,,	அ. கணபதி பிள்ளை	,,

அங்கத்தினர்.

க	சீமான்	த. வே. உமாமஹேஸ்வரம் பிள்ளை அவர்கள் B.A.,B.L.	
உ	,,	R. வேங்கடாசலம் பிள்ளை	,,
ங *	,,	அ. கணபதி பிள்ளை	,,

௪ ஸ்ரீமான் வே. இராதாகிருஷ்ண பிள்ளை அவர்கள், B. A.
௫ ,, சி. தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை ,,
௬ ,, R. கோவிந்தசாமி பிள்ளை ,,
௭ ,, R. கிருஷ்ணசாமி பிள்ளை ,,
௮ * ,, T. N. குருமூர்த்தி பிள்ளை ,,
௯ ,, பா. கல்யாணசுந்தரம் பிள்ளை ,,
௰ ,, V. கோவிந்தசாமி நாயுடு ,,
௧௧ ,, பனஞ். ச. ஆறுமுகம் பிள்ளை .o. ,,
௧௨ பெரியகுள லோ. சொக்கலிங்கம் பிள்ளை B.A.B.L. ,, பெரிய கிளைக் [illegible]
௧௩ ,, பொ. சுப்பிரமணிய பிள்ளை ,,
௧௪ * ,, கோ. கோபாலகிருஷ்ண பிள்ளை ,,
௧௫ * ,, நா. துரைசாமி பிள்ளை ,,
௧௬ ,, பக்கீர்முகம்மது சாஹிப் ,,
௧௭ * ,, E. R. நடேசம் பிள்ளை ,,
௧௮ * ,, கோவிந்தராஜன் ,,
௧௯ ,, மு. பாலகிருஷ்ண பிள்ளை ,,
௨௰ ,, வீ. சு. சிதம்பரம் பிள்ளை ,,
௨௧ ,, சா. நடேச பிள்ளை ,,
௨௨ ,, சி. சிவராமகிருஷ்ண பிள்ளை ,,
௨௩ ,, ஐ. குமாரசாமி பிள்ளை ,, B. A.
௨௪ * ,, உ. நா. அப்பாசாமி ஐயர் ,,
௨௫ * ,, தி. முனிசாமி முதலியார் ,,
௨௬ * ,, தி. பொ. தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை ,,
௨௭ ,, அ. சுப்பையா பிள்ளை ,,
௨௮ ,, ச. சண்முகம் பிள்ளை ,,
௨௯ * ,, அ. பாலசுப்பிரமணிய பிள்ளை ,,
௩௰ * ,, தி. பொ. இராமலிங்கம் பிள்ளை ,,
௩௧ * ,, அ. சுந்தரேசம் பிள்ளை ,,
௩௨ ,, A. இராமசாமி பிள்ளை ,,

௩௩	ஸ்ரீமான்	ம. தா. மதார் சாஹிப்	அவர்கள்.
௩௪	,,	ஆ. மாணிக்கஞ் செட்டியார்	,,
௩௫	,,	வை. அரங்கசாமி பிள்ளை	,,
௩௬	,,	அ. திருவேங்கடஞ் செட்டியார்	,,
௩௭	,,	த. அ. நாராயணசாமி பிள்ளை	,,
௩௮ *	,,	N. சுப்பிரமணிய பிள்ளை	,,
௩௯ *	,,	மு. பொன்னுசாமி பிள்ளை	,,
௪0	,,	து. சுந்தரேசம் பிள்ளை	,,
௪௧ *	,,	T. A. சம்பந்தம் பிள்ளை	,,
௪௨	,,	E. R. பொன்னுசாமி பிள்ளை	,,
௪௩	,,	K. சோமசுந்தரம் பிள்ளை	,,
௪௪	,,	R. பெரியசாமி சேர்வை	,,
௪௫	,,	மா. சிங்காரவேலுப் பிள்ளை	,,
௪௬ *	,,	மு. அருணாசலம் பிள்ளை	,,
௪௭	,,	ச. அ. சாம்பசிவம் பிள்ளை	,,
௪௮	,,	T. B. சோமநாத ராவ்	,,
௪௯	,,	D. கந்தசாமி பிள்ளை	,,
௫0	,,	J. நடேச பிள்ளை	,,
௫௧	,,	கோ. வேங்கடாசலம் பிள்ளை	,,
௫௨ *	,,	அ சதாசிவம் பிள்ளை	,,
௫௩	,,	ச. சந்திரசேகரம் பிள்ளை	,,
௫௪	,,	D. இரத்தினம் பிள்ளை	,,
௫௫	,,	T. M. இராம்தாஸ் ராவ் மாடிக்	,,
௫௬	,,	V. பிச்சைமுத்து முதலியார்	,,
௫௭	,,	நா. சீத்தாராம் பிள்ளை	,,
௫௮	,,	அ. ஜகராயப் பிள்ளை	,, B. A., B. L.
௫௯	,,	அ. அனந்த விஜயமுதலியார்	,,
௬0	,,	ஆ. முத்துக் குமாரசாமி பிள்ளை	,, B. A.
௬௧	,,	R. திருஞானம் பிள்ளை	,,

* திருச்சிக்கிளை அங்கத்தினர்கள்.

அனுபந்தம் உ.

கரந்தைத்தமிழ்ச்சங்கம்.
தஞ்சை.

பிரமாதீச—ஆனந்த வருடத்தில் புத்தகங்க ள்
உதவியவர்களின் விவரம்.

நெ.		பெயர்	பிரதிகள்.
க	கனம்.	வீ. சுப்பராயபிள்ளை அவர்கள், கரந்தை	51
உ	,,	மதுரைத் தமிழ்ச்சங்கம்	49
௩	,,	ப. சிவகுருநாதபிள்ளை அவர்கள், கரந்தை	6
ச	,,	அ. பாலகிருஷ்ண பிள்ளை அவர்கள், B. A. கரந்தை	6
ரு	,,	அ. கணபதி பிள்ளை அவர்கள், திரிசிரபுரம்	5
சு	,,	சைவசபை, பாளையங்கோட்டை	2
எ	,,	சதாசிவம்பிள்ளை அவர்கள், கரந்தை	2
அ	,,	T. S. பொன்னுசாமிபிள்ளை அவர்கள், திரிசிரபுரம்	1
கூ	,,	P. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், கரந்தை	1
௰	,,	மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், திரிசிரபுரம	1
கக	,,	ஐ. குமாரசாமி பிள்ளை அவர்கள், B.A., கரந்தை	1
கஉ	,,	T. S. முருகேசம் பிள்ளை அவர்கள், கரந்தை	1
க௩	,,	L. உலகநாத பிள்ளை அவர்கள், தஞ்சை	1
கச	,,	K. குப்புசாமி பிள்ளை அவர்கள், தஞ்சை	1
கரு	,,	நடேசையர் அவர்கள், தஞ்சை	1
		ஆ மொத்தம்	129

அனுபந்தம் ௩.

CERTIFICATE OF INCORPORATION.

NO. 1 of 1914—15.

I hereby certify, pursuant to Act XXI of 1860 of the Governor-General of India in Council entitled 'An Act for the Registration of Literary, Scientific and Charitable Societies, 1860.', that the **'Karanthai Tamil Sangam'** Tanjore is duly incorporated as a Society under the aforesaid Act.

Office of the Assistant Registrar of Joint Stock Companies, Tanjore. Dated 1st May, 1914.	R. CHACKRAPANI ROW, *Assistant Registrar of Joint Stock Companies.*

SEAL.

அநுபந்தம் ச.

கரந்தைத்தமிழ்ச்சங்கம்.

திரிசிரபுரம் கிளை.

திருச்சியில் வதிதரும் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தங்கத்தினர்தாம் அச்சபையின் உறுப்பினராகும் பெருமைக்கு முற்றும் உரியாராம்படி தமிழில் சிறந்த தேர்ச்சிபெறவும், தமக்குள் சகோதரபாவமும் தமிழ்த்தொண்டர் பக்தியும் பெருக்கிக் கொள்ளவும் ஆவலுற்றனராக, அதற்கேற்ப கனம் வே. இராதா கிருஷ்ண பிள்ளை B. A. அவர்களது முயற்சியினால் தாய்ச் சபையின் அனுமதியின்பேரில் இக் கிளைச்சபை பிரமாதீச ஞூ கார்த்திகை மீ கஉ (16—11—13) தாபிக்கப் பெற்றது. எனவே, தாய்ச்சபையின் மூன்றாம் ஆண்டு நிறைவில் இக் கிளைச்சபை ஆரம்பித்து ஆறுமாதமாயிற்று. இவ்வாறு மாதத் திற்குரிய விவரம் வருமாறு:—

க. அங்கத்தினர்.

இக்கிளைச்சபை முதலில் பதினேழு அங்கத்தினர்களோடு ஆரம்பித்தது. இவருள் உத்தியோக நிமித்தம் வேற்றூருக்கு மாற்றப் பெற்றாரொருவர். சங்கத்தினின்றே நீங்கினாரொருவர். இவ்வருடத்தில் பிறவூரிலிருந்து இவ்வூருக்கு வந்து சேர்ந்த அங்கத்தினர் இருவர். எனவே, தற்போது உள்ளார் பதினெழுவரே.

உ. கூட்டங்கள்.

வர்த்தமான ஆறுமாதத்தில் பதின்மூன்று கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களில் அங்கத்தினர்கள் குறித்த விஷயங்களைப்பற்றி உபந்நியசிப்பதுடன் சிலர் தாம் ஏற்படுத்திக்கொண்ட நூல்களில் ஒவ்வொரு வாரமும் இருபது வரிக்குக் குறையாமல் பாடம்சொல்லி விளக்கவும் நியமம் செய்துகொண்டிருக்கின்றனர். அங்ஙனம் செய்துகொண்டார் எழுவர். ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட நூல்கள் கலித்தொகை, திருக்கோவையார், நாலடியார், திருக்குறள், புறநானூறு,நளவெண்பா. இக்கூட்டங்களில் ஆஜராயிருந்த அங்கத்தினர்களின் தொகை சராசரி எழு. இவையன்றி காரியாலோசனைக்கூட்டமும் ஒன்று நடந்தது.

ந. வசூல்.

பிரஸ்தாபகாலத்தில் இக்கிளைச்சபை மூலமாய் வருவாய் விவரம் வருமாறு:—

மாதசசந்தா	ரூ	21–4—0
புத்தகசாலைச்சந்தா	ரூ	6—8—0
நன்கொடை	ரூ	3—10–0
மொத்தம்	ரூ	31–6—0

செலவொன்றுமில்லை.

—

ச். வந்தனம்.

திருச்சி அங்கத்தினரின் அபிவிருத்திகருதி மிக்க சிரத்தையோடு இக்கிளையைத் தாபித்துத் தாம் இவ்வூரில் உள்ளவரையில் கிளைக்காரியதரிசி ஸ்தானத்தை வகித்து எங்கட்கு நன்மையே நாடிய கனம் வே. இராதாகிருஷ்ண பிள்ளை அவர்கள்பால் நாங்கள் என்றும் மாருத நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். அன்றியும், இக்கிளைச்சபையைத்தாபிப்பதற்கு உத்தரவு அளித்ததுடன் எங்கள் அபிவிருத்திக்காக யாம் வேண்டும் புத்தகங்களையும் உதவி இன்னும் வேண்டிய செய்துவரும் தாய்ச்சபையாருக்கு எங்களன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம். கூட்டங்கள் நடத்துவதற்காக இடவசதி செய்து கொடுத்துதவும் தென்னூர் ஸ்ரீமான். தீ. ச. பொன்னுசாமி பிள்ளை அவர்களுக்கும், கோட்டை ஸ்ரீமான் இ. ரா. நடேச பிள்ளை அவர்களுக்கும் ஸ்ரீமான். நா. சுப்பரமணிய பிள்ளை அவர்களுக்கும் யாம் மிகுதியும் கடமைப் பட்டிருக்கின்றோம்,

திரிசிரபுரம், }
ஆனந்த ௵ வைகாசி ௴ }

அ. கணபதி,
கிளைக்காரியதரிசி.

அனுபந்தம் ௫.

கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

பிரமாதீச—ஆனந்த வருடத்தில் வரவு செலவு விவரம்.

வரவு.	தொகை. ரூ.	அ.	ப.	செலவு.	தொகை. ரூ.	அ.	ப.
சென்ற வருஷக்கடைசியில் பாக்கி	50	13	3	பொதுக்கூட்டச் செலவு	3	1	0
				அச்சுக்கூலி	35	14	0
இவ்வருஷத்தில் சந்தா—				ஸ்டேஷனரி	0	12	9
				பிரயாணச் செலவு	2	10	6
மாதச்சந்தா ரூ. 147—0—0				தபால், தந்தி	2	3	0
புத்தகசாலைச் சந்தா ரூ. 25—0—0	172	0	0	சங்கத்திற்குப் புத்தகம் வாங்கியது	49	14	0
				இரண்டாவது வருஷோத்சவச் செலவு ...	96	7	7
நன்கொடை	222	12	6	கைவிளக்கு இரண்டு வாங்கியது	3	0	0
புத்தகம் விற்றமுதல்	14	5	6	பாடம் சொல்லுபவர்க்கு வண்டிச்சத்தம் ...	10	0	0
சில்லறை	0	2	0	சங்கத்தை ரிஜிஸ்தர்செய்ததற்கு	50	0	0
				மொத்தம் ...	253	14	10
				பாக்கியிருப்பு.—			
				சங்கத்தலைவர்வசம் ரூ. 116-11-11			
				பொருளாளர் வசம் ரூ. 89—6—6	206	2	5
மொத்தம் ...	460	1	3	மொத்தம் ...	460	1	3

தஞ்சை, கரந்தை.
ஆனந்த௵ வைகாசி௴
௰௫௳.

R. வேங்கடாசலம்,
காரியதரிசி.

ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை,
பொருளாளர்.

பரிசோதனையிற் சரியெனக் காணலாயிற்று.

பா. கல்யாணசுந்தரம்,
கணக்குப்பரிசோதகர்.

establishing Industrial and Technical Institutions Tamil Schools and Colleges, undertaking Translations from other languages and production of original works on Sciences, management of Charitable and Educational Institutions and Trusts entrusted to the Sangam, holding conferences etc. etc.

All interested in the cause are welcome to become Members.

கரந்தைத் தமிழ்ச்சங்கம்

தஞ்சை.

தமிழ் மொழியின் அபிவிருத்தி கருதியும், தமிழரது மேம்பாட்டை எண்ணியும், இச்சங்கம் விரோதிகிருது ௵ வைகாசி ௴ ௧௨ தாபிக்கப் பெற்றது. ஆலோசனை சபையிலுள்ள மாட்சி மிக்க இந்தியா கவர்னர் ஜனரல் அவர்களது பாஷை, சாத்திர சம்பந்தமான சபைகளைப் பதிவு செய்வதற்கான 1860-ம் வருடத்திய 21-வது சட்டப்படி இச்சங்கம் பதிவு செய்யப்பட்டுமுளது. தமிழ் மொழியன்பும், தமிழ்நன்மக்களிடத் தார்வமும் கொண்டுள்ள அருந் தமிழன்பர் யாவரும் இச்சங்கத்தின் அங்கத்தினராகும்படி கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள்.

R. வேங்கடாசலம்,

காரியதரிசி.

தமிழ்.

சங்கநிதி பதுமநிதி
யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத்
தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம்
மதிப்போம் அல்லேம்
மாதமிழுக் கேகாந்தர்
அல்லராகில
அங்கமெலாம் குறைந்தழுகு
தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும்
புலைய ரேனும்
தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர்
அன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்குங்
கடவு ளாரே.